மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மொத்தத்தில் ரூ. 73,140க்காக ஒரு செயற்குறிப்பை இயக்குநர் அவர்கள் அரசுக்கு அளித்திருக்கிறார்கள். நிதி இலாகா அதிலே குறிப்பாக பணியாளர்களுக்கு கட்டடம் கட்டுவது, விசை ஏற்றத்துக்கான அறை, துளைக் கிணறு அமைப்பது, எம். எஸ். தொட்டி கட்டுவது ஆகியவைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அது இல்லாமல் இந்த நிலையத்தை அங்கே வைப்பது சாத்தியமாக இல்லை. எனவே அதை மீண்டும் நிதி இலாகாவிற்கு இந்தத் துறை இந்தக் கோரிக்கையை அனுப்பியிருக்கிறது. அது நிதி இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது.

மாயூரம்-மணல்மேடு சாலை

*499 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-மணல்மேடு நெடுஞ்சாலையினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு ப. உ. சண்முகம்: இல்லை.

மாயூரத்திலுள்ள ஆற்றுப்புறம்போக்கு நிலங்கள்

*500 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம் போக்குகளில் ஆக்கிரமித்திருப்போரை அப்புறப்படுத்த அரசு மேற் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்திருப்போரை அகற்றுவதற்காக மாயூரம் கிளை பிரிவின் உதவிப் பொறியாளர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீசுகள் கொடுத்து ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். அத்துடன் அவர்களிடமிருந்து அபராதத் தொகைகளை வசூலிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

Reservation of production of sarees for Handlooms

*501 *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre during 1973 on the enforcement of the ban on production of coloured cotton sarees by Powerlooms; and

(*b*) if so, the details of the same?

1974 மார்ச் 19]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (ஆ) இந்திய அரசிடமிருந்து 1973-ம் ஆண்டில் தகவல் எதும் வரவில்லை. 11–4–1973ல் பம்பாயி லுள்ள துணி நூல் ஆணையரிடமிருந்து வந்த கடிதத்தில், வேஷ்டிகள், புடவைகள் டவல்கள், படுக்கை விரிப்புகள், துப்பட்டி உற்பத்தி செய்வதை கைத்தறிகளுக்கே ஒதுக்குவது என்பது, ஒரு விரிவான கொள்கையாகும் என்றும் அதனை அனைத்திந்திய கைத்தறி வாரியம் முதலில் ஆராய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

திரு. என். கே. பழனிசாமி : ஹாண்ட்லூம் போர்டு ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? 1953-ம் வருஷத்திலேயே ஓர் தீர்மானம் போட்டோம். இப்போதும் நாம் தீர்மானம் போட்டோம். சந்தானம் கமிட்டியும் இதே அளவிலே சிபார்சு பண்ணியிருக்கிறது. ஆகவே, ஹாண்ட்லூம் போர்டு ஒத்துக்கொண்டால் தான் இம்மாதிரியான நடவடிக்கை என்று சொன்னால், சர்க்கார் மக்களை திரட்டி—20,000 தறிக்கு நூல் இல்லை கோவையில் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது—மத்திய சர்க்காரை நிர்ப்பந்திக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை இந்த மன்றத்தில் நாம் விரிவாக விவாதித்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்தினிடமும் இதை வற்புறுத்தி சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலும், பிரதம அமைச்சரிடத்திலும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றி இங்கே விளக்கியிருக்கிறோம். ஆக, இந்தக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறதா அல்லது மறுக்கிறதா என்பதை பொறுத்துத்தான் எதிர்கால நடவடிக்கை இருக்க முடியும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, since the fashion of dyed sarees are changing yielding place to printed sarees like nylon sarees, reservation of dyed sarees is not going to serve much purpose to-day under the present conditions. So, will this Government think of requesting the Central Government to ban the manufacture of cloth below 100 counts and above 45 inches so that substitutes for sarees cannot be made by them and the handloom business will not suffer consequently ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு புதிய யோசனையாகச் சொல்கிறார்கள். இப்பொழுது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி ரிசர்வேஷனைப் பொறுத்தது. கைத்தறியில்தான் இந்த ரகம் உற்பத்தி செய்ய வேண்டும், வேஷ்டி, சேலை என்று நாம் சிபார்சு செய்திருக்கிறோம். ஆனால், மத்திய அரசு ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவின் அடிப்படையில் வேஷ்டி என்றால் கலர்டு பார்டர்ஸ் என்பதோடு $\frac{1}{4}$ இன்ச் அகலம் என்றும் போடப்பட்டிருக்கிறது. அதை அப்படியே அமுல் நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கரை வேஷ்டியும், கரைப் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று இங்கே நாம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். மத்திய அரசு சட்டத்திலும் இடம் இருக்கிறதே? அதைப் புறக்கணிக்கக் கூடிய முறையில் மில்கள் சாதாரணமான துணிகளைப் போட்டு அதைப் புடவையாக ஆக்குகிறார்கள். அதே மாதிரி கரை இல்லாமல் இருந்தாலும் கூட அதை வேஷ்டியாக ஆக்குகிறார்கள். அதைத் தடை செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்திலே அப்படிச் செய்வதற்கு வழி வகை வைத்துவிட்டு தடுப்பது எப்படி என்பதை ஆராயச் சொல்வது வருந்தத்தக்கது என்று கருதுகிறேன். நான் இங்கே விளக்கமாகச் சொன்னேன். வேஷ்டி என்று போட்டிருந்தால் பிரச்சினை இருக்காது. வேஷ்டி என்று போட்டு கலர்டு பார்டர்ஸ் என்று போட்டு அது $\frac{1}{4}$ இன்ச் அகலம் என்றும் போட்டிருப்பதால்தான் தொல்லைகள் வருகின்றன. அது ஒன்று. இன்னொன்று மாநில அரசுதான் அதை அமல் நடத்த வேண்டும். ஒரு மாநிலத்தில் உற்பத்தி செய்து இன்னொரு மாநிலத்தில் விற்றால் அதைத் தடுக்க முடியாது. இப்படிப்பட்ட ஓட்டைகள் அந்த உத்தரவில் இருக்கின்றன. நம்முடைய மாநில அரசின் பரிந்துரை வேஷ்டி என்றால் வேஷ்டி சேலை என்றால் சேலை என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் கைத்தறிக்கு மாத்திரம் என்று சொல்லியிருக்கிறோம். 4 விசைத் தறி என்றால் எக்ஸெம்ஷன் என்ற நிலை கூட கூடாது. நம்முடைய கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் இந்தப் பிரச்சினை இருக்காது. நாம் இதற்காக ஒரு சட்டம் இயற்றுவதற்காக இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை

*502 வினா—திரு. கு. திருப்பதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேலூரில் அமைந்திருக்கும் மதுரை மாவட்ட கூட்டுறவு நூற் பாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நூற்பாலையில் தற்போது நிறுவப்பட்டிருக்கும் 12,420 நூற்கும் கதிர்களை 25,000க்கு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. சோனையா : மேலூர் பகுதியிலே வேலையில்லா திண்டாட்டத்தினால் பல பேர் கஷ்டப்படுகிறார்கள். இந்த மில்லை அதிகமாக வேலை வாய்ப்பு கொடுக்கின்ற அளவுக்கு விஸ்தரிப்பதற்கான திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?